DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 31/2023 Crime No. 467/2022 Station Bhavani

| Name | PW1-பரமேஷ்வரன் | Caste | |
|---|---|---|---|
| Father Name | வெங்கடாசலம் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 42 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 18.12.2023 |

**எதிரி பிரகாஷ் ஆஜர்.**

**முதல் விசாரணை**-

**1.** நான் கூத்தம்பட்டியில் குடியிருந்து கொண்டு கட்டட வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்து போன எனது அப்பா வெங்கடாசலம் ஆவார். கடந்த 16.11.2023 வருடம் காலை சுமார் 8.30 மணியளவில் எங்களது வீட்டிலிருந்து வேலைக்கு செல்வதற்காக நானும், எனது மனைவி ஒரு வண்டியிலும் எனது அப்பா அவரது இரு சக்கர வாகனத்தில் எங்களுக்கு முன்னால் தாண்டாபுரம் அருகே பவானி நோக்கி சென்று கொண்டிருக்கும்போது எனது அப்பாவின் வாகனத்திற்கு பின்னால் அதே திசையில் வந்த ஈச்சர் வேன் எனது அப்பாவின் வாகனத்தின் மோதி விபத்தை ஏற்படுத்தியது. விபத்தை பார்த்த நான் அருகில் சென்று பார்த்த போது எனது அப்பாவிற்கு மண்டையில் அடிப்பட்டிருந்தது.

2. உடல் முழுவதும் இரத்த காயம் ஏற்பட்டிருந்து. அங்கிருந்தவர்களின் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலமாக எனது அப்பாவை பவானி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே எனது அப்பா இறந்துவிட்டதாக கூறிவிட்டார்கள். பின்னர் நான் பவானி காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **புகார் மனு அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்றைய தினம் மாலை பவானி அரசு மருத்துவமனையில் நடைபெற்ற பிரேத விசாரணையின் போது எனது அப்பாவின் பிரேதத்தை அடையாளம் காட்டி உடன் இருந்தேன். ஆசர் எதிரி தான் ஈச்சர் வேனை ஓட்டி வந்தவர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

**1.** விபத்து சமயத்தில் எனது தகப்பனாருக்கு வயது 65 இருக்கும் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் அவர் ஓட்டிச்சென்ற வானத்திற்கு காப்பீட்டு சான்று இல்லை என்றாலும், ஓட்டுநர் உரிமம் உள்ளது, காப்பீட்டு சான்று இல்லை. எனது தகப்பனாரின் ஓட்டுநர் உரிமத்தை போலிசார் விசாணையின் போது கொடுத்துள்ளேன். நான்

சொல்வது தவறு என்றாலும் எனது தகப்பனாருக்கு ஒட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் போலிசார் விசாரணையில் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. விபத்தின் போது எனது தகப்பனார் தலைக்கவசம் அணிந்து செல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனுவை காவல் நிலையத்தில் உள்ள ஒரு போலிசார் தான் எழுதினார். என்னிடம் படித்து காட்டிய பின்பு தான் கையொப்பம் வாங்கினார். எனது தகப்பனார் இரு சக்கர வானத்தில் செல்லும் போது அவரை முந்தி சென்ற இரண்டு சக்கர வாகனத்தின் மீது மோதி நிலை தடுமாறி பின்னால் வந்த ஈச்சர் வானத்திற்குள் விழுந்து விட்டார் என்று புகார் மனுவில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அது போல தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

2. எனது எனது தகப்பனார் மீது மோதிய இரு சக்கர வாகனம் நிற்காமல் சென்று விட்டது என்றாலும் ஈச்சர் வாகனம் நின்றுவிட்டது என்றாலும் சரிதான். மேற்படி இரு சக்கர வாகனத்தின் பதிவு எண்ணை என்னால் கண்டுபிடிக்க இயலவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் இறப்பிற்க்காக இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியது போல எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், விபத்திற்கு காரணமான இரு சக்கர வாகனத்தின் மீது தான் புகார் அளித்திருக்க வேண்டும் என்றாலும் நஷ்ட ஈடு பெற வேண்டுமென்பதற்க்காக எதிரியின் மீது பொய்யான புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவினார் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 31/2023 Crime No. 467/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW2-கண்ணம்மா | Caste | |
| Husband Name | வெங்கடாசலம் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 60 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 18.12.2023 |

**எதிரி பிரகாஷ் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் கூத்தம்பட்டியில் குடியிருந்து கொண்டு இல்லதரசியாக உள்ளேன். இந்த விபத்தில் இறந்து போன வெங்கடாசலம் எனது கணவர் ஆவார். தேதி மாதம் நினைவு இல்லை. கடந்த 1 ஆண்டிற்கு முன்பு தாண்டாபுரம் அருகே காலை சுமார் 9.00 மணியளவில் எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டு விட்டதாகவும் அவரை பவானி அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாகவும், எனது மகன் அ.சா.1 எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தாா. நான் உடனடியாக பவானி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே எனது கணவர் இறந்துவிட்டதாக கூறிவிட்டார்கள். அன்றைய தினம் மாலை பவானி அரசு மருத்துவமனையில் நடைபெற்ற பிரேத விசாரணையின் போது எனது கணவரின் பிரேதத்தை அடையாளம் காட்டி உடன் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது கணவரின் இறப்பிற்க்காக இழப்பீடு பெற வேண்டி இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 31/2023 Crime No. 467/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW3-சங்கீதா | Caste | |
| Husband Name | பரமேஷ்வரன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 34 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 18.12.2023 |

**எதிரி பிரகாஷ் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

**1.** நான் கூத்தம்பட்டியில் குடியிருந்து கொண்டு கட்டட வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்து போன எனது மாமனார் வெங்கடாசலம் ஆவார். கடந்த 16.11.2022 வருடம் காலை சுமார் 9.00 மணியளவில் எங்களது வீட்டிலிருந்து வேலைக்கு செல்வதற்காக நானும், எனது கணவரும் ஒரு வண்டியிலும் எனது மாமனார் அவரது இரு சக்கர வாகனத்தில் எங்களுக்கு முன்னால் தாண்டாபுரம் அருகே பவானி நோக்கி சென்று கொண்டிருக்கும்போது எனது மாமனார் வாகனத்தை ஒரு பைக் முந்திக்கொண்டு சென்றது. அதில் எனது மாமனார் அவரது வாகனத்தின் வேகத்தை குறைத்தார் அப்போது அதே திசையில் அவருக்கு பின்னால் வந்த ஈச்சர் வேன் எனது மாமனாரின் வாகனத்தின் மோதி விபத்தை ஏற்படுத்தியது. விபத்தை பார்த்த நான் அருகில் சென்று பார்த்த போது எனது மாமனாருக்கு மண்டையில் அடிப்பட்டிருந்தது.

2. உடல் முழுவதும் இரத்த காயம் ஏற்பட்டிருந்து. அங்கிருந்தவர்களின் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலமாக எனது மாமனாரை பவானி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே எனது மாமனார் இறந்துவிட்டதாக கூறிவிட்டார்கள். பின்னர் எனது கணவர் பவானி காவல் நிலையம் சென்று புகார் அளித்தார். அன்றைய தினம் மாலை பவானி அரசு மருத்துவமனையில் நடைபெற்ற பிரேத விசாரணையின் போது எனது மாமனாரின் பிரேதத்தை அடையாளம் காட்டி உடன் இருந்தேன். ஆஜர் எதிரி தான் மேற்படி ஈச்சர் வாகனத்தை ஓட்டி வந்தவர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

எனது மாமனார் ஓட்டி சென்ற வாகனத்திற்கு பின்னால் சுமார் 200 மீட்டர் தூரத்தில் நாங்கள் வந்து கொண்டிருந்தோம். எனது மாமனார் விபத்து ஏற்பட்டு கீழே விழுந்ததற்கு பிறகு தான் நாங்கள் அவரை பார்த்தோம் என்றாலும், நான் முதல் முதலாக பார்க்கும் போது அவர் கீழே விழுந்து கிடந்தார் என்றாலும் சரிதான். இந்த விபரத்தை தான்போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றாலும் சரிதான். எனது மாமனார் இறப்பிற்கு இழப்பீடு பெறுவதற்க்காக முதல் விசாரணை சாட்சியத்தில் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 31/2023 Crime No. 467/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW4-இந்த்ராணி | Caste | |
| Husband Name | முருகேசன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 39 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 18.12.2023 |

**எதிரி பிரகாஷ் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் கூத்தம்பட்டியில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்து போன வெங்கடாசலம் எனது அப்பா ஆவார். கடந்த 16.11.2022 தேதியன்று காலை 9.00 மணியளவில் தாண்டாபுரம் அருகே எனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டு விட்டதாக கேள்விபட்டு நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்றேன்.அங்கிருந்தவர்களின் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அவரை பவானி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம், அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே எனது அப்பா இறந்துவிட்டதாக கூறினார்கள். அன்றைய தினம் மாலை பவானி அரசு மருத்துவமனையில் நடைபெற்ற பிரேத விசாரணையின் போது எனது அப்பாவின் பிரேதத்தை அடையாளம் காட்டி உடன் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவின் இறப்பிற்க்காக இழப்பீடு பெற வேண்டி இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 31/2023 Crime No. 467/2022 Station Bhavani

| Name | PW5- சுந்தரராஜ் | Caste | |
|---|---|---|---|
| Father Name | பழனியப்பன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 43 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 18.12.2023 |

**எதிரி பிரகாஷ் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் கூத்தம்பட்டியில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்து போன வெங்கடாசலம் எனது அண்ணன் ஆவார். தேதி மாதம் நினைவு இல்லை. கடந்த ஒரு ஆண்டிற்கு முன்பு ஒரு நாள் காலை சுமார் 9.00 மணியளவில் தாண்டாபுரம் அருகே எனது அண்ணனுக்கு விபத்து ஏற்பட்டு விட்டதாக கேள்விபட்டு நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்றேன். அங்கிருந்தவர்களின் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அவரை பவானி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம், அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே எனது அண்ணன் இறந்துவிட்டதாக கூறினார்கள். அன்றைய தினம் மாலை பவானி அரசு மருத்துவமனையில் நடைபெற்ற பிரேத விசாரணையின் போது எனது அண்ணனின் பிரேதத்தை அடையாளம் காட்டி உடன் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது அண்ணனின் இறப்பிற்க்காக இழப்பீடு பெற வேண்டி இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.